**O.S. : 19/2023**

Date : 23.06.2025

வா.சா.1 : நம்பி

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் களக்காடு கூட்டுறவு சங்கத்தில் எந்த ஆண்டு முதல் வேலை பார்த்து வந்தேன் என்றால் 30.09.1987 ல் இருந்து ஒய்வு பெறும் வரை அங்குதான் வேலை பார்த்தேன். செந்தாமரைச்செல்வி 20.01.1997 முதல் வேலை பார்த்தார். பிரச்சனை காலத்தில் தலைவர் சூசை அந்தோணி ஆவார். அவர் அரசியலில் செல்வாக்கும் மற்றும் ஆள்பலம்மிக்கவர் என்றால் சரிதான். என்னிடம் அவர் நெருக்கமாக இருப்பார் என்றால் நான் பியூன் அவர் தலைவர் அந்த நெருக்கம்தான். நீதிமன்றத்தில் முன்ஜாமீன் எடுத்ததில் நானும் சூசை அந்தோணியும் சேர்ந்துதான் எடுத்தோம் என்றால் ஒரே கேஸ் என்பதால் சேர்ந்து எடுத்தோம். தலைவர் சூசை அந்தோணிக்கு வேறு கிரிமினல் வழக்கு உண்டு என்றால் இருக்கலாம். எனக்கு சர்க்கரை நோயும், பிரசர் நோயும் உண்டு என்றால் இப்போதைக்கு உண்டு. முன்பு கிடையாது. நான் சஸ்பென்ட் ஆன பிறகு இந்த நோய் வந்தது. 2019 ல் இருந்து வந்தது. பிரதிவாதியின் புகாரின்பேரில் என் மீது வழக்கு பதிவு செய்தது 03.06.2017 ஆகும். வழக்கில் ஜாமீன் பெற்ற பின்பு ரூ.10,000/- பிணையத்தொகை நீதிமன்றத்தில் கட்டவில்லை என்றால் சரியல்ல. கட்டியுள்ளேன். பிரதிவாதி என் மீது மட்டுமல்லாமல் சூசை அந்தோணி மீதும் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி புகாரில் என்ன குறிப்பிட்டுள்ளார் என்றால் தலைவர் சொன்னதைதான் நான் கேட்கிறேன் என்று சொல்லியுள்ளார். பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் விசாரணைக்கு பிறகு என் மீதும் தலைவர் மீதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு எண்தான் சி.சி.315/2019 ஆகும். சி.சி.315/2019 வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை ரத்து செய்ததாக நான் சொல்வது உண்மைதானா என்றால் உண்மைதான். என் மீதும் தலைவர் மீதும் வழக்கு ரத்து செய்யப்பட்டதா என்றால் நான் வழக்கு போட்டதால் என் மீது மட்டும் ரத்து செய்யப்பட்டது. அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எனது வக்கீல் தாக்கல் செய்திருப்பார். என்மீது வழக்கு ரத்து ஆகவில்லை என்பதால்தான் நான் உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. நான் முன்பிணையில் சென்ற உத்தரவு மற்றும் முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய கேட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவுகள் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சி.சி.315/2019 வழக்கில் என்னை விடுவித்த காரணம் என்னவென்றால் பொய்யான வழக்கு என்றும் சாட்சி இல்லை என்றும் விடுவிக்கப்பட்டேன். முதல் தகவல் அறிக்கை 2017 ல் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2017 ல் சிவில் வழக்கு பதிவு செய்யாததற்கு காரணம் என்னவென்றால் 2019 ல் என்னை சஸ்பென்ட் செய்த பிறகுதான்இந்த வழக்கு தாக்கல் செய்தேன். சஸ்பென்ட் உத்தரவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இந்த ஒரு காரணத்திற்காக மட்டும் என்னை சஸ்பென்ட் செய்யவில்லை என்றாலும் வேறு காரணங்களும் உள்ளது என்றால் சரியல்ல. நான் பணிக்காலத்தில 04.06.2014 முதல் 27.07.2014 வரை 54 நாட்கள் மருத்துவர் விடுப்பில் இருந்தேன் என்றால் எனக்கு லீவு இருந்ததால் மருத்துவ விடுப்பில் இருந்தேன். 04.09.2014 முதல் 28.09.2014 வரை 25 நாட்கள் மருத்துவ விடுப்பில் இருந்தேன் என்றால் சரிதான். இரண்டு மருத்துவ விடுப்பில் செல்வதற்கு மருத்துவர் அலீமா மீரான் என்பவரிடம் சான்று பெற்றுதான் விடுப்பில் சென்றேன் என்றால் சரிதான். டாக்டர் என்னை பரிசோதனை செய்துதான் சான்று கொடுத்தார். எனக்கு என்ன என்று சான்று கொடுத்தார் என்றால் நான் காய்ச்சல் என்று சொன்னேன். அவர் என்ன எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவ விடுப்பு எடுத்த காலத்திலேயே எனக்கு பிரசர், சுகர் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த காலத்தில் இல்லை. அதே போன்று 15.03.2018 முதல் 27.03.2018 வரை 13 நாட்களுக்கு சர்க்கரை அளவும், எனக்கு பிரசர், சுகர் இருப்பதாக மருத்துவ சான்றிதழ் கொடுத்து விடுப்பு பெற்றுள்ளேன் என்றால் விடுப்பு பெற்றேன். ஆனால் பிரசர், சுகர் இல்லை. எனக்கு மற்ற நோய்கள் இருப்பதாக சிகிட்சை பெற்றேன் என்று நான் கூறியிருப்பது அவைகள் எனது தவறான பழக்க வழக்கத்தால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த நோய்க்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நானும், தலைவர் சூசை அந்தோணி அவர்களும் சட்டத்திற்கு புறம்பாக சுய லாபம் அடைய வேண்டி பிரதிவாதியை பெண் என்றும் பாராமல் பல வழிகளில் துன்புறுத்தி, கஸ்டப்படுத்தி சங்கத்தில் பணி செய்ய விடாமல் தடுத்ததால் வேறு வழியின்றி பிரதிவாதி மனமுடைந்து மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு அரசு மருத்துவமனையில் சிகிட்சை பெற்றார் என்றால் சரியல்ல. நானும், தலைவரும்

பிரதிவாதியை அளவுக்கு அதிகமாக மனரீதியாக கொடுமைப்படுத்தியது உண்மை என்பதால்தான் களக்காடு காவல் நிலையத்தில் எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றாலும்,விசாரணைக்கு பின்பு குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் இறந்து போய் விட்டார் என்றால் எனக்குதெரியாது. பிரதிவாதிக்கு குழந்தை ஏதும் இல்லாமல் ஒரு குழந்தையை தத்து எடுத்து வளர்க்கிறார் என்றால் சரிதான். என் மீது குற்ற வழக்கு பதிவு செய்தது குறித்து எனது உறவினர்கள், நண்பர்கள் கேட்டதால் எனக்கு மனகஸ்டம் ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளது அவ்வாறு யார் கேட்டார் என்றால் பெயர் குறிப்பிட்டு சொல்லமுடியாது. நிறையா பேர் கேட்டார்கள். வழக்கு பதிவு செய்தது சம்பந்தமாக தினசரி பத்திரிகையில் வெளி வந்ததாக நான் சொல்லியுள்ளதில் அந்த பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொலைக்காட்சியில் செய்தி வந்ததாக நான் சொல்லியுள்ளதை குறித்தும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்குநேரி குற்றவியல் நிதிமன்றத்தில் என் மீதும், சூசை அந்தோணி மீதும் மேற்படி வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு சி.சி.எண்.315/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளாகிய எங்களுக்கு அழைப்பாணை அனுப்ப 02.09.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதியிடமிருந்து மோசடியாக பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தினால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது நோய்களுக்கும், நான் பெற்ற சிசிட்சைக்கும் பிரதிவாதி எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார் என்றால் சரியல்ல. எங்களது இருவரின்செயலால் பிரதிவாதிக்குதான் மன வேதனை ஏற்பட்டுள்ளது என்றும் பிரதிவாதியின் செயலால் எங்களுக்கு எந்த மனவேதனையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியை கஸ்ட நஸ்ட படுத்த இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.